**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.91/2023**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சரவணபாண்டியன்)**
**17.06.2025**

**4ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வாதி வசந்தா எனது தாயார். அவர் என்னுடன் தான் உள்ளார். நல்ல உடல்நிலையுடன் உள்ளார் என்றால் இல்லை, நடக்கமுடியாமல் உள்ளார். எனது தாயாருக்கு என்ன பிரச்சனை என்றால் முதுகு வலி உள்ளதால் நடந்தால் மயக்கம் வருகிறது. அவரை நேரில் விசாரணை செய்தால் பதில் சொல்லக்கூடிய மனநிலையில் உள்ளார் என்றால் சரிதான்.

2. எனது தாத்தாவிற்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டுள்ள பத்திரங்கள் தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இதர பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பத்திரங்கள் பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

3. சொத்து தொடர்பான முழு விவரமும் எனது தாயாருக்கு தான் தெரியும் என்றால் எனக்கும் தெரியும். எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் நாளது தேதியில் இல்லை என்றால் சரிதான்.

4. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்கறிஞரிடம் எனது தாயார் தான் விவரம் சொன்னார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது தாயார் நடந்து வந்து விவரம் சொல்லும் அளவிற்கு நல்ல உடல்நிலையுடன் இருந்தார் என்றால் சரியல்ல.

5. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வீட்டில் வைத்து தயார் செய்து எனது தாயாரிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் அவ்வாறு தான் வாங்கினார்கள்.

6. 1 முதல் 3 பிரதிவாதிகளை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து சம்மந்தமாக புகார் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை.

7. எதற்காக பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் நாங்கள் கல் ஊன்ற செல்லும் போது பிரச்சனை செய்கிறார்கள், அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் தாவா சொத்தை அனுபவம் செய்வதாக சொல்வதில் பிரதிவாதிகள் நாளது தேதி வரை எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. தாவா சொத்தில் எத்தனை வருடங்களாக அனுபவத்தில் உள்ளோம் என்றால் சுமார் 60 வருடங்களாக அனுபவத்தில் உள்ளோம். அவ்வாறு அனுபவம் செய்து வந்தோம் என்பதற்கு கிஸ்தி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேடி பார்த்து தான் சொல்லவேண்டும்.

9. எனது பெயரிலோ, எனது தாயார் பெயரிலோ தாவா சொத்தில் அனுபவம் செய்து வருவது தொடர்பாக நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் 1992ஆம் ஆண்டில் தெரியும். தாவா சொத்தில் வில்லங்கம் உள்ளதாக அப்போதே தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

11. தாவா சொத்து சம்மந்தமாக நாளது தேதி வரை யார் யார் பெயரில் பட்டா மாறியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதலில் 1ஆம் பிரதிவாதி கருப்பையா பெயரில் தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த கருப்பையா பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி வட்டாட்சியரிடமோ, வருவாய் கோட்டாட்சியரிடமோ, மாவட்ட ஆட்சியரிடமோ மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

12. தாவா 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டது தொடர்பாகவும், வட்டாட்சியரிடமோ, வருவாய் கோட்டாட்சியரிடமோ, மாவட்ட ஆட்சியரிடமோ மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

13. ஒரு சொத்தை பட்டா மாற்றம் செய்யும் போது சொத்தை பார்வையிட்டு அளவை செய்த பிறகு தான் உட்பிரிவு செய்து பட்டா மாற்றப்படும் என்றால் சரிதான். அவ்வாறு தான் மேற்சொன்ன 3 பட்டாக்களும் ஏற்பட்டுள்ளன என்றால் சரிதான்.

14. வழக்கில் எனது தாயார் என்னன்ன பரிகாரங்கள் கேட்டுள்ளார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

15. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இருந்து வருவதாக சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றும்,, அனுபவத்தில் இருந்து வருவதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

16. வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

17. எனது தாயாரை முறையாக நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து விசாரிக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் சரிதான். எனது தாயார் நல்ல உடல்நிலையுடன் தான் இருந்து வருகிறார் என்றும், அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் உண்மை விவரம் தெரிந்துவிடும் என்பதால் உடல்நிலை சரியில்லை என சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

18. தாவா சொத்தை பொறுத்து முறையான பத்திரங்கள் ஏற்பட்டுள்ள காரணத்தினால் தான் நல்ல எண்ண அடிப்படையில் 4, 5 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், அவர்களுக்கு எதிராக வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**4ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.